தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
*An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal*
*eISSN: 3049-0723*
*Vol. 2 Issue: 01 August 2025*

# திருக்குறளும் ஆத்திசூடியும் நவிலும் வாழ்வியல்
# Life Principles Expounded by Thirukkural and Aathichoodi

**வெ. தனலட்சுமி[1], முனைவர் கோ. கிருஷ்ணன்[2],**

1.ஆராய்ச்சியாளர், தமிழ்த்துறை,
கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை 600078, தமிழ்நாடு, இந்தியா.

2.நெறியாளர், பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 600078, தமிழ்நாடு, இந்தியா.

**V. Dhanalakshmi[1], Dr. G. Krishnan[2]**

1.Research Scholar, Department of Tamil,
Faculty of Arts and Humanities, Meenakshi Academy of Higher Education and Research (Deemed University), Chennai 600078, Tamil Nadu, India.
EMail: devidhanam176@gmail.com, ORCID ID: https://orcid.org/0009-0006-7095-483X

2.Research Guide, Professor, Department of Tamil, Faculty of Arts and Humanities, Meenakshi Academy of Higher Education and Research (Deemed University), Chennai 600078, Tamil Nadu, India.

**Abstract:**

This paper undertakes a comparative analysis of Aathichoodi, an eleventh-century treatise, and Thirukkural, a thirteenth-century work, both of which are considered key texts of Tamil literature. The primary focus of this study is to examine the ethical and moral frameworks presented in these works, particularly in the context of caste, social justice, and personal conduct. By exploring these themes through a critical lens, this paper aims to underscore the relevance of these ancient literary works for our contemporary understanding of ethics, morality, and social harmony.

**Objectives:**

- To analyze the ethical and moral principles outlined in Aathichoodi and Thirukkural, with a special emphasis on their treatment of caste and social inequality.
- To compare and contrast the approaches to moral philosophy and social justice presented in these two texts.
- To demonstrate the enduring value of these ancient works for contemporary discussions on ethics, morality, and social cohesion.

**Methodology:**

This study employs a critical interpretive approach, combining close reading with comparative analysis. Primary sources include Aathichoodi and Thirukkural, along with secondary materials such as scholarly articles, monographs, and journals. The investigation is structured around key themes, with each section offering an in-depth examination of the relevant passages and ideas.

**Keywords:** Aathichoodi, Thirukkural, literature, ethics, comparison.

**ஆய்வுச் சுருக்கம்**

சோழர் காலச் சமூகத் தேவைகளுக்கும், அறம்சார் வழிகாட்டலுக்கும் வலு சேர்க்கும் நோக்கில் ஔவையாரின் ஆத்திசூடி உருவாக, அதேபோல சங்கமருவிய காலத்தின் அறம் குன்றிய சமூகச் சூழலைச் சீர்திருத்தி, நன்னெறிப்படுத்த வேண்டிய அவசியத்தில் திருவள்ளுவரின் திருக்குறள் மலர்ந்தது. இவ்விரு பெரும் இலக்கியங்களிலும் பொதிந்துள்ள வாழ்க்கை நெறிகளையும், அறக்கருத்துக்களையும் ஒப்பீட்டு நோக்கில் நுணுகி ஆராய்ந்து வெளிக்கொணர்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும். மனித வாழ்வுக்கு அத்தியாவசியமான அறநெறிப் போதனைகள் ஆத்திசூடியிலும் திருக்குறளிலும் எவ்விதம் கற்பிக்கப்பட்டுள்ளன என்பதை வலியுறுத்தி, அவற்றை எதிர்காலத் தலைமுறைக்கு ஆவணப்படுத்துவதும் இவ்வாய்வின் முக்கிய குறிக்கோளாகும். இவ்வாய்வு, பண்புசார் மற்றும் விளக்கமுறைப் பகுப்பாய்வு அணுகுமுறைகளை ஒப்பீட்டு நோக்கில் கையாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்கான முதன்மைத் தரவுகளாக ஆத்திசூடி, திருக்குறள் ஆகிய மூலநூல்களும், அவை குறித்த ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், இதழ்கள் போன்ற துணைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்கள் முன்வைக்கும் அறக்கருத்துக்கள் சமூகத்தில் வேரூன்றி, அமைதியான வாழ்வை மேம்படுத்த துணைபுரிய வேண்டும் என்பதே இவ்வாய்வின் இறுதி இலக்காகும்.

**திறவுச்சொற்கள்**

ஆத்திசூடி, திருக்குறள், இலக்கியம், நீதி, ஒப்பீடு.

**முன்னுரை**

உலகளாவிய நோக்கில் இலக்கியப் படைப்புக்களின் பொதுமையையும், ஒருமையையும் காண முயல்வது ஒப்பிலக்கிய ஆய்வாகும். வெவ்வேறு இலக்கியங்களுக்கு இடையில் காணப்படக்கூடிய உறவுகளையும், தனித்துவங்களையும் ஒப்பிட்டு நோக்குவது இதன்பாற்படும். இதன்மூலம் அவ்விலக்கியப் படைப்புக்களின் தனித்துவங்கள் சமூகத்தில் சிறப்புப் பெற வழிவகுக்கின்றன. அவ்வகையில் ஔவையாரின் ஆத்திசூடியும், திருவள்ளுவரின் திருக்குறளும் இங்கு ஒப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. ஔவையார் என்ற பெயரில் பலர் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்திருந்தாலும் சோழர் காலத்தில் வாழ்ந்த ஔவையாருக்குத் தமிழிலக்கியப் புலத்தில் தனியான மதிப்புண்டு. ஏனெனில் அவர் சமூகத்தினை நல்வழிப்படுத்தும் முயற்சியில் நீதிபோதனைகளைப் போதித்து பல அற இலக்கியங்களைப் பாடியுள்ளார். அரசர்களின் ஆதரவைப் பெற்ற இப்பெண்பாற்புலவர், கி. பி 12 ஆம் நூற்றாண்டில் சமூகத்தேவையின் பொருட்டு அறத்தினைப் போதிக்கவேண்டிய சூழலில் “ஆத்திசூடி” எனும் நீதி நூலைப்படைத்து அறப்பணியாற்றினார். இந்நூல் 108 நீதிக்கூற்றுக்கள் மூலம் மானிட வாழ்வுக்குரிய அறம்சார்ந்த கருத்துக்களை எடுத்துரைக்கின்றன.

இதைப்போலவே குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் சமூகத் தேவையின் பொருட்டு திருவள்ளுவரால் படைக்கப்பட்ட இலக்கியமே திருக்குறளாகும். குறிப்பாகக் களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் நிகழ்ந்த சங்கமருவியகாலச் சூழலில் சீரழிந்து கிடந்த தமிழகத்து மக்களை அறத்தின் வழி வாழ வழிகாட்டும் பொருட்டுத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது. இது அறம், பொருள், இன்பம் எனும் முப்பெரும் பகுதிகளை உடையனவாக 133 அதிகாரங்களைக் கொண்டதாகப் படைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தகைய உலக வாழ்வுக்குரிய நீதிக்கருத்துக்கள், இலக்கியங்களான ஆத்திசூடியிலும், திருக்குறளிலும் எவ்வாறு புலப்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராய இவ்வாய்வுக் கட்டுரை முயற்சிக்கின்றது.

**அறம்**

அறம் என்பது வாழ்க்கைக்குரிய நீதிக்கருத்துக்களையே சுட்டுகின்றது. அறத்தின் வழியே வாழவேண்டும் என்பதே இதன் கருத்தாகும். எப்பொழுதும் நல்ல காரியங்களை மட்டுமே செய்வதற்கு ஆசைப்பட வேண்டும். மறந்தும் மனதால்கூட மற்றவர்களுக்குக் கெடுதல் தரும் விடயங்களைப் பற்றி நினைக்கக் கூடாது என்கிறார் ஔவையார். இதனையே "அறம் செய விரும்பு" (ஆத்திசூடி 1) என்கிறார். இவ்வாறான அறம் சார்ந்த நீதிக்கருத்துக்கள் திருக்குறளிலும் வலியுறுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. உதாரணமாக,

"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு." (குறள் 32)

என்பதன் மூலம் அறத்தைவிட நன்மை தருவது ஏதும் இல்லை என்கிறார் திருவள்ளுவர், மேலும்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற." (குறள் 34)

என்ற திருக்குறட்பாவும் அறத்தின் அவசியத்தினையே சுட்டுகின்றது. உள்ளத்தில் குற்றம் இல்லாமல் வாழ்வதே அறவாழ்க்கையாகும். மற்றவை எல்லாம் அறத்தின்பாற்படாது என்கிறார். இவ்வாறு ஆத்திசூடியிலும், திருக்குறளிலும் அறமே உயர்வாகப் பேசப்பட்டுள்ளது.

**கோபம் தவிர்த்தல்**

கோபம் தவிர்த்தல் என்பது வெகுளாமையைக் குறிக்கின்றது. இதனையே ஔவையார் "ஆறுவது சினம்" (ஆத்திசூடி 2) என்ற கூற்றின் மூலம் வலியுறுத்துகின்றார். கோபத்தைத் தணிக்க வேண்டும். கோபத்தைக் குறைக்க வேண்டும். கோபம் வரும்போது பேச்சைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அப்போது எடுக்கும் எந்த முடிவும் சரியாக இருக்காது. கோபம் குறைந்த பிறகு ஆற அமர யோசித்து எடுக்கும் முடிவே சரியாக இருக்கும். எனவே கோபத்தைக் குறைத்துக் கொள்வது சாலச் சிறந்தது. கோபம் கொள்ளாமல் இருப்பது அதைவிடச் சிறப்பாக இருக்கும். இத்தகைய கோபம் தவிர்த்தல் சார்ந்த கருத்துக்களைத் திருவள்ளுவர் 'வெகுளாமை' என்ற அதிகாரத்தில் கூறியுள்ளமையை காணலாம். உதாரணமாக,

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்." (குறள் 301)

எனும் திருக்குறட்பாவின் மூலம், தன்னுடைய கோபம் பலிக்கும் இடங்களில் கோபத்தைக் காட்டாமல் காத்துக்கொள்பவனே சினத்தைக் காப்பவனாவான். சினம் காட்டுவதற்கு முடியாத இடத்தில் சினத்தைக் காப்பதாகச் சொல்லமுடியாது என்கிறார். அத்துடன்,

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்." (குறள் 303)

எனும் திருக்குறளின் மூலம், யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் மறந்து விடவேண்டும். சினத்தினால் தீமையான விளைவுகளே ஏற்படும் என்கிறார். இவ்வாறான கருத்துக்கள் மூலம் நாம் கோபத்தினைத் தவிர்த்து வாழ வேண்டும் என்பதனையே ஔவையாரும், திருவள்ளுவரும் வலியுறுத்துகின்றனர்.

**கொடை**

கொடை என்பது நாம் வறுமையுடையவர்களுக்குக் கொடுக்கும் ஈதல் தன்மையையே குறிக்கின்றது. எனவே நாம் கொடை கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்த வந்த ஔவையார் "ஈவது விலக்கேல்" (ஆத்திசூடி 4) என்கிறார். இதன்மூலம் பிறருக்கு உதவி செய்வதைத் தடுக்கக் கூடாது என்கிறார். அதாவது நம்மால் பிறருக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை, மற்றவர்கள் பிறருக்குச் செய்யும் உதவியைத் தடுக்கக் கூடாது என்பது இதன் மூலம் புலனாகின்றது. மேலும் நாம் பிறருக்குக் கொடுக்க வேண்டுமே தவிர யாசகம் பெறக்கூடாது என்கிறார்.

இதனையே "ஏற்பது இகழ்ச்சி" (ஆத்திசூடி 8) என்கிறார். அத்துடன் பிச்சை எடுத்துச் சாப்பிடுவது இழிவான செயல்தான் என்றாலும் அவ்வாறு பிச்சை கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அவர்களுக்கு கொடுத்து விட்டுப் பிறகு மீதி இருப்பதை நாம் சாப்பிடுவது தான் நல்ல செயலாகும் என்றும் சுட்டியுள்ளார். இதனையே "ஐயம் இட்டு உண்" (ஆத்திசூடி 9) என்ற உயர் கூற்று வலியுறுத்துகின்றது. திருவள்ளுவரும் இவ்வாறான கொடை சார்ந்த கருத்துக்களை 'ஈகை' என்னும் அதிகாரத்தில் வலியுறுத்தியுள்ளார்.

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து." (குறள் 221)

என்பதில் கொடை என்பது யாது என்கிறார் திருவள்ளுவர். வறியவர்களுக்குக் கொடுப்பதே கொடை என்கிறார். மற்றவை எல்லாம் அவற்றின்பாற்படாது என்கிறார். மேலும்,

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி." (குறள் 226)

என்பதன் மூலம் பொருளில்லாதவர்களின் வறுமையைப் பொருள் உள்ளவன் தீர்க்க வேண்டும். அதுவே அவனுக்குப் பிற்காலத்திற்கு உதவும் என்கிறார் திருவள்ளுவர். எனவே ஔவையாரும், திருவள்ளுவரும் கொடை கொடுத்து வாழவேண்டும் என்பதனை உயர்வாகவே வலியுறுத்தியுள்ளமை புலனாகின்றது.

**முயற்சி**

எந்த ஒரு செயலில் ஈடுபடும்போதும் இடையில் சில தடங்கல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அந்த மாதிரி நேரங்களில் நாம் நம் மனதளவில் உற்சாகத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனக்கூறும் ஔவையார், "ஊக்கமது கைவிடேல்" (ஆத்திசூடி 6) என்ற கூற்றின் மூலம் இதனை வலியுறுத்துகின்றார். திருவள்ளுவரும் 'ஊக்கம் உடைமை' எனும் அதிகாரத்தில் இதனை வலியுறுத்தியுள்ளார். உதாரணமாக,

"உடைய ரெனப்படுவது ஊக்கம்அஃ தில்லார்
உடையது உடையரோ மற்று." (குறள் 591)

எனும் திருக்குறளில், உடையவர் என்றால் ஊக்கத்தினை உடையவரே. ஊக்கத்தினை உடையவராக இல்லாமல் வேறு எதை உடையவராக இருந்தாலும் அவர் உடையவர் ஆக மாட்டார் என்கிறார் திருவள்ளுவர். மேலும்,

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை." (குறள் 594)

என்பதன் மூலம் தளராத ஊக்கம் கொண்டவனிடத்தில் செல்வம் தானே வழிகேட்டு வந்து சேரும் என்கிறார். நாம் தைரியத்தைக் கைவிட்டு விடக்கூடாது. உடல் அளவில் இருக்கும் தைரியத்தை விட மனதளவில் கொள்ளும் தைரியம் வேகத்தையும் கொடுக்கும், வெற்றியையும் கொடுக்கும். எனவே நாம்

முயற்சியுடையவர்களாகத் திகழ வேண்டும் என்பதையே ஔவையாரும், திருவள்ளுவரும் வலியுறுத்துகின்றனர்.

**ஒற்றுமை**

உலக அனுபவத்தை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். அதனால் நாம் ஊரோடு ஒத்துப் போகவேண்டியது அவசியம். இதனாலேயே "ஒப்புரவு ஒழுகு" (ஆத்திசூடி 10) என்கிறார் ஔவையார். நம்மை சுற்றி சில நல்ல விடயங்களும் சில கெட்ட விடயங்களும் நடந்து கொண்டே தான் இருக்கும். அந்தந்த சூழ்நிலைக்கேற்ப நாம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம் என்கிறார். மேலும் "கிழமைப்பட வாழ்" (ஆத்திசூடி 34) என்பதன் மூலமும் இதனை வலியுறுத்துவது புலனாகின்றது. இதன் மூலம், தனக்கு மட்டுமின்றி பிறருக்கும் உதவியாக வாழ வேண்டும். தான் மட்டும் தனித்து இயங்கிக் கொள்ள முடியும் என்றோ, யாருடைய உதவியும் சார்பும் இல்லாமல் வாழ்ந்தவிட முடியும் என்றும் நினைத்தல் கூடாது. நாம் மட்டும் வாழாமல், நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் வாழ வைப்பவனே மனிதன் என்கிறார்.

"தேசத்தோடு ஒட்டி வாழ்" (ஆத்திசூடி 62), "ஊருடன் கூடி வாழ்" (ஆத்திசூடி 104) முதலிய ஔவையாரின் கூற்றுக்களும் சிறப்புக்குரியன. இவை மக்களின் ஒற்றுமையையே சுட்டுகின்றன. எனவே ஊரோடு ஒற்றுமையாக இணைந்து வாழ்ந்தால் நமக்கு உயர்வு நிச்சயமாகக் கிடைக்கும் என்பது இதன் மூலம் சுட்டப்படுகின்றது. திருவள்ளுவரும் ஒற்றுமை சார்ந்தும், சுற்றம் தழுவி வாழ்தல் தொடர்பாகவும் அறக்கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள." (குறள் 527)

எனும் திருக்குறளில், காக்கை தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தன்னுடைய இனத்தைக் கூவியழைத்துச் சேர்ந்து உண்ணும், அத்தகைய குணம் உள்ளவர்க்கே சுற்றத்தாரால் நன்மையும், புகழும், செல்வமும் உண்டாகும் என்கிறார். மேலும்,

"கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்." (குறள் 525)

எனும் திருக்குறட்பாவில், பொருள் உதவி செய்தும், இனிமையாகப் பேசியும் வாழ்பவனை உறவினர்கள் சூழ்ந்தே இருப்பார்கள் என்கிறார். எனவே சுற்றத்துடன் வாழும் வாழ்க்கையே சிறந்தது. அதுவே பயன் விளைவிப்பது என்று கூறி ஒற்றுமையாக வாழ வேண்டியதன் அவசியத்தையும் திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளமை சிறப்புக்குரியது. எனவே நாம் ஒற்றுமையுடையவர்களாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

சோழர்காலச் சமூகத் தேவையின் பொருட்டு சமூக நீதியைப் பறைசாற்ற எழுந்த இலக்கியமே ஔவையாரின் ஆத்திசூடி ஆகும். இதைப்போலவே சங்கமருவியகாலச் சீரழிந்த சமூகத்தினை அறத்தினால் மாற்றவேண்டிய தேவை ஏற்பட்ட வேளையில் திருக்குறள் திருவள்ளுவரால் படைக்கப்பட்டது. எனவே மனிதன் சிறப்புற வாழ்வாங்குவாழ வழிகாட்டும் விதத்திலேயே வாழ்க்கைக்கு அவசியமான நீதிக்கருத்துக்கள் தம்முடைய காலச்சூழலில் இருவராலும் மக்களுக்குப் போதிக்கப்பட்டுள்ளன. இதனைக் கண்ணுற்றே இவ்விரு இலக்கியங்களிலும் பேசப்பட்ட

நீதிக்கருத்துக்களை ஒப்பாய்வுக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து காட்சிப்படுத்த இவ்வாய்வுக் கட்டுரை முனைந்துள்ளது. அவற்றினை நாம் நமது வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக வேண்டியது அவசியமானதாகும். அதோடு நமது எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை, ஒழுக்கவியல் நடைமுறைகளுக்கும் இவை இன்றியமையாதனவாகும். எனவே இவ்வாறான உயரிய அறக்கருத்துக்கள் சமூகத்தில் நிலைபெற்று, சமாதானமிகு வாழ்வு மேம்பாடடைய இவை போன்ற சிந்தனைகளை மனித சமூகம் கடைபிடித்து வாழ்தலே மிகச் சிறந்த வாழ்வியல் முறைகளாகும்.

**துணைநூற்பட்டியல் (பயன்பட்ட நூல்கள்)**


1.அம்பிகாபதி, டி. கோவிந்தசாமி, பி. (1996). வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறி.சென்னை: ஸ்ரீராம்ஸ் ஐக்கியக் கழகம்.

2. ஆறுமுகநாவலர் (உரை). (1955). ஆத்திசூடி. சென்னை: வித்தியானுபாலனா மெஷினரி.

3. அவ்வையார் அறிவுச்செல்வங்கள். (1997). கொழும்பு: இந்து கலாச்சாரத் துறை.

4. பாலசுப்ரமணியம். (2014). குறளின் கண்கள். இலக்கிய ஆய்வறிக்கை. திருச்சிராப்பள்ளி: இந்தியப் பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர்கள் மன்றம்.

5. பாலசுந்தரம் பிள்ளை, டி.எஸ். (1943). அவ்வையார் திருவுள்ளம். திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்தியா சைவ நூற்றாண்டு சங்கம்.

6. குழந்தைசாமி, வி.எஸ். (1987). வாழும் வள்ளுவம். சென்னை: பாரதி பதிப்பகம்.

7. இராமசாமி, சி.ஆர். (1951). திருக்குறள் பொருள் விளக்கம். திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்தியா சைவ நூற்றாண்டு சங்கம்.

8. சேதுப்பிள்ளை, ஆர்.பி. (1956). திருவள்ளுவர் நூல் நயம். திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ நூற்றாண்டு சங்கம்.

9. சொக்கலிங்கம், எஸ்.என். (1994). அவ்வையார் பாடல்கள். சென்னை: வானதி பதிப்பகம்.

10. சுப்ரமணியபாரதி, ஏ. (1921). அவ்வை அருந்தமிழ். சென்னை: பழனியாண்டிப்பிள்ளை நிறுவனம்.


**References:**


1. Ambikapathi, D., & Govindasamy, B. (1996). *Vaḷḷuvar Kāṭṭum Vāḻviyal Neṟi* (The Lifestyle Path Shown by Valluvar). Chennai: Srirams United Association.
2. Arumuganavalar (Ed.). (1955). *Ātticūṭi*. Chennai: Vidyanupalana Machinery.
3. *Avvaiyār Aṟivuccelvaṅkaḷ* (Avvaiyar's Treasures of Wisdom). (1997). Colombo: Hindu Cultural Department.
4. Balasubramaniam. (2014). *Kuṟaḷiṉ Kaṇkaḷ* (The Eyes of Kural). Literary Research Paper. Tiruchirappalli: Indian University Tamil Teachers' Forum.
5. Balasundaram Pillai, T. S. (1943). *Avvaiyār Tiruvuḷḷam* (Avvaiyar's Sacred Intent). Tirunelveli: Tirunelveli South India Saiva Centenary Association.
6. Kuzhanthaisamy, V. S. (1987). *Vāḻum Vaḷḷuvam* (Living Valluvam). Chennai: Bharathi Publications.
7. Ramasamy, C. R. (1951). *Tirukkuṟaḷ Poruḷ Viḷakkam* (Explanation of the Meaning of Tirukkural). Tirunelveli: Tirunelveli South India Saiva Centenary Association.
8. Sethupillai, R. P. (1956). *Tiruvalluvar Nūl Nayam* (The Literary Aesthetic of Tiruvalluvar's Work). Tirunelveli: Tirunelveli South India Saiva Centenary Association.
9. Sokkalingam, S. N. (1994). *Avvaiyār Pāṭalkaḷ* (Avvaiyar's Songs). Chennai: Vanathi Publications.
10. Subramaniabarathi, A. (1921). *Avvai Aruṅkamil* (Avvai's Exquisite Tamil). Chennai: Palaniandipillai Institution.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.